DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-160/2023
Prosecution witness – PW.5

| | | |
|---|---|---|
| Name | : செந்தில் வேல் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

14.12.2023

<u>முதல் விசாரணை</u>

1. நான் கீழத்தூவலில் வசித்து விறகு வெட்டும் தொழில் செய்கிறேன். இம்மனுவின் மனுதாரர் எனது மச்சான். இதர சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள்.

2. கடந்த 09.08.2015 ம் தேதியன்று நான் என் சொந்த வேலையாக வெளியூர் சென்றிருந்தேன். அப்போது என் வீட்டின் முன்பு எனது மச்சான் ஆறுமுகத்திற்கு சொந்தமான மேக்சிகேப் வாகனத்தை நிறுத்திவிட்டு சென்றிருந்தேன். நான் மதியம் 2 மணிக்கு வந்து பார்த்தபோது என் வீட்டில் முன்பு நிறுத்தப்பட்ட வாகனம் இல்லாதது தெரிந்து என் அம்மா மற்றும் தங்கையிடம் கேட்டபோது கமுதி போலீசார் வந்து எடுத்து சென்றதாக கூறினார்கள்.

3. நான் மறுநாள் சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் மனு ஒன்றை பதிவு தபாலில் அனுப்பி வைத்தேன். அந்த மனு மற்றும் அதற்கான ரசீது ம.சா.ஆ.6 ஆகும். அதனை பெற்றுக்கொண்ட காவல் கண்காணிப்பாளர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

4. என் மச்சான் சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க புகார் அளித்துள்ளார்.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.